★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under No QB/8945/78

மலர் 21 ஆடி 23 நம்மான் 14 இதழ் 177

யாழ்ப்பாணம் புதன்கிழமை 8-8-79

RECEIVED 1979-8-8 PERIODICALS DIVISION UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS ★ LIBRARY ★

## இந்தியாவின் உபஜனாதிபதி ஹிதாயத்துல்லா

(புதுடில்லி) பாரதத்தின் அடுத்த புதிய உப ஜனாதிபதியாக, ஓய்வு பெற்ற முன்னாள் பிரதம நீதியரசர் ஹிதாயத்துல்லா பதவியேற்பார்.

உபஜனாதிபதி பதவிக்கு மொத்தம் பதினொருபேர் வேட்புமனு தாக்கல் செய்திருந்த போதிலும் சரியான அங்கீகாரம் இல்லாத காரணத்தினால் பத்துப் பேரின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஜனாப் ஹிதாயத் துல்லாவின் மனு மட்டுமே ஏற்கப்பட்டது. நேற்று உத்தியோக பூர்வமாக தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

## கோட்டை ரயில் நிலையத்தில் பால் விநியோகம்

(கொழும்பு) கோட்டை ரயில்நிலைய பால் டிப்போ விற்பனை நிலையத்தை இன்றுமாலை கிராமிய கைத் தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. தொண்டமான் திறந்து வைக்கவுள்ளார்.

இலங்கை ஹோட்டல் கூட்டுத்தாபனமும், இலங்கை வங்கியும் இணைந்து இப்பால் விற்பனை நிலையத்தை அமைத்துள்ளன. திறப்பு விழா வைப

(6-ம் பக்கம் பார்க்க)

# பாராளுமன்றப் பகிஷ்கரிப்பு

# கூட்டணி இன்று இறுதி முடிவு

## சபை பகல் கூடுகிறது

(கொழும்பு)

**பாராளுமன்ற பகிஷ்கரிப்பைத் தொடர்ந்தும் நடத்துவதா; அல்லது கைவிடுவதா என்பது குறித்து இறுதியாகத் தீர்மானிக்குமுகமாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்றக்குழு நேற்று முடிவு எதுவும் எடுக்காத போதிலும்; பாராளுமன்றப் பகிஷ்கரிப்பை தமிழர் விடுதலைக்கூட்டணி அநேகமாக கைவிடலாம்; என்று அரசியல் வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றன.**

**பாராளுமன்றப் பகிஷ்கரிப்பு சம்பந்தமாக இறுதி முடிவு எடுக்கும் பொருட்டு நேற்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்றக்குழு கூடிய போதிலும் முடிவான தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்படாத நிலையில் இன்று காலைவரை குழுவின் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது. இன்று காலை மீண்டும் கூடும் கூட்டணியின் பாராளுமன்றக் குழுகூடி, மேற்படி விஷயமாக இறுதித் தீர்மானத்தை எடுக்கும்.**

மதவாச்சியின் மூன்று உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுகளையும் வவுனியாவுடன் இணைப்பது சம்பந்தமாக அரசாங்கம் கடந்த மாதம் மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து பாராளுமன்றத்தை தமிழர் விடுதலை கூட்டணி பகிஷ்கரித்து வருவது தெரிந்ததே.

### பொதுச்சபை தீர்மானம்

மேற்படி "இணைப்பு" சம்பந்தமான தீர்மானம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட போது, பாராளுமன்றத்துக்குப் போவதில்லை என்று தமிழர் விடுதலை கூட்டணியின் பாராளுமன்றக்குழு தீர்மானித்து, வெளிநடப்பு செய்திருந்ததுடன், இது சம்பந்தமான இறுதி முடிவை கூட்டணியின் பொதுச்சபையே எடுக்கவேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றியிருந்தது.

இதனைத் தொடர்ந்து வவுனியாவில் கூடிய கூட்டணியின் பொதுச்சபை, பாராளுமன்றப் பகிஷ்கரிப்பைக் கைவிடுவதா அல்லது தொடர்வதா என்பது குறித்து பாராளுமன்றக் குழுவே முடிவெடுக்கவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியிருந்ததுடன், ஜனாதிபதி ஆணைக்குழுவில் பங்குபற்றுவதற்கு "பச்சை விளக்கும்" காட்டியிருந்தது.

### நேற்றுக் கூடியது

பாராளுமன்றக் குழு நேற்று இங்கு கூடியபோது, எம்.பிக்கள் சிலர் சமூகமளிக்காத காரணத்தினால் மேற்படி விஷயமாக ஆலோசனை நடத்தி, இறுதி முடிவை எடுப்பதை இன்று புதன்கிழமை வரைஒத்தி வைத்தது.

### இன்று இறுதி முடிவு

கூட்டணியின் பாராளுமன்றக்குழு மீண்டும் இன்று காலை கூடி பாராளுமன்றப் பகிஷ்கரிப்பு சம்பந்தமான இறுதி முடிவை எடுக்கும்.

### பகிஷ்கரிப்பு கைவிடப்படுமா?

பாராளுமன்றப் பகிஷ்கரிப்பை கைவிடுவதற்கு கூட்டணியின் ஒரு சாரார் மத்தியில் கடும் எதிர்ப்பு இருந்த போதிலும்; வவுனியா இணைப்பை அரசாங்கம் கைவிடும் நிலையில் இப்பதாலும், தெரிவுக் கமிட்டிக்கு அரசு அங்கீகாரம் அளித்திருப்பதாலும் தற்போதைய நிலையில் பாராளுமன்றப் பகிஷ்கரிப்பை கூட்டணி கைவிடுவது ஒரு நல்ல வரவேற்பு அறிகுறியாக இருக்கலாம் என்று பெரும்பான்மை கூட்டணி எம்.பிக்கள் கருதுவதாகத் தெரியவருகிறது. இன்றுள்ள சூழ்நிலையில் பகிஷ்கரிப்பை கூட்டணி கைவிடலாம் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்றம் இன்று பிற்பகல் மூன்று மணிக்கு கூடுகிறது. இன்றைய கூட்டத்தில சட்டமூலங்கள் சமர்ப்பிக்கப் படவிருக்கிறது.

அரசாங்க பாராளுமன்றக் குழு இன்று காலை 9-30 க்கு கூடுகிறது. (ம)

## 'அரசாங்கத்தில் ஏன்சேர்ந்தேன்?'

(இரத்தோட்டை) "இன்றைய அரசு சிறுபான்மையினரின் உரிமைகளை மதிக்கிறது. அரசமைப்பில் தமிழ் மொழிக்கு உரியஇடம் அளித்திருக்கிறது எனவேதான் நான் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தில் சேர்ந்தேன்"

இவ்வாறு பிரதிசேரவிருத்தி இந்துக் கலாச்சார தமிழ்மொழி அலுவல்கள்

(6-ம் பக்கம் பார்க்க)

றோட்டறி கழக 321-ம் மாவட்ட

## ஆளுநர் ஜம்புகேசன் இன்று யாழ்.வருகிறார்



(யாழ்ப்பாணம்) றோட்டறிக் கழகத்தின் 321ம் மாவட்டத்தின் (ஆளுநர்) கவர்னர் திரு. பீ. வி. ஜம்புகேசன் யாழ் றோட்டறிக் கழகத்திற்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இன்றுநண்பகல் தமது துணைவியாருடன் யாழ்ப்பாணம் விஜயம் செய்கின்றார்.

இம்மாதம் 11ம் திகதிவரை யாழ்ப்பாணத்தில் தங்கவிருக்கும் திரு. ஜம்புகேசவன் நாளை இரவு யாழ். றோட்டறிக் கழகத்திலும் நாளை மறுதினம் கிளிநொச்சி, பருத்தன் றோட்

(6ம் பக்கம் பார்க்க)

## விஞ்ஞானகணித ஆசிரியராக நியமிக்குமாறு கோரிக்கை

### தேசிய கணிதடிப்.வணர்மாமன்றம் மகஜர்

(யாழ்ப்பாணம்) "இலங்கைத் தொலைக்கல்வி நிறுவனத்தில் தேசிய டிப்ளோமா பயிலும் மாணவர்களை, அரசாங்கம் விஞ்ஞான கணித ஆசிரியர்களாக நியமனம் செய்யவேண்டும்"

இவ்வாறு, கோரும் மகஜரொன்றை இலங்கைத் தொலைக்கல்வி நிறுவன தேசிய கணித டிப்ளோமா மாணவர் மன்ற யாழ்ப்பாணக்கிளை யாழ். மாவட்ட அமைச்சர் திரு யோகேந்திரா துரைசுவாமியைச் சந்தித்து கையளித்தனர்.

அம்மகஜரில் கூறப்பட்டுள்ள முழுவிபரமும் கீழே தரப்படுகின்றன.

"மூன்று வருடங்களைக் கொண்ட இந்நெறி 1978 நடுப்பகுதியுடன் முடிவெய்தியிருத்தல் வேண்டும். ஆனால் இன்னும் எமக்கு இரண்டாம் வருட பரீட்சைகூட நடைபெறவில்லை.

1978 அக்டோபர், நவம்பர் 1979 பெப்ரவரி, மே மாதங்களில் மட்டுமே 2 வருடத்திற்குரிய நான்கு பாடங்கள் கிடைத்துள்ளன இரண்டாம் வருடப் பரீட்சை செப்டம்பரில் நடக்குமென விஞ்ஞான மாணவர்களுக்கு எவ்வித பதிலும் இல்லை.

வகுப்புக்கள் ஒழுங்காக நடைபெறுவதில்லை. சிலவேளைகளில் நடைபெறுவதில்லை.

எமக்கேற்படும் பிரச்சினைகள் பற்றி நிறுவனத்திற்கு நாம் அனுப்பும் கடிதங்களுக்கு சிலவேளைகளில் எவ்வித பதிலும் கிடைப்பதில்லை.

எமது மன்றம் இயங்குவதற்கு யாழ் பல்தொழில் நுட்ப நிறுவனத்தில் வசதி செய்து தரப்படல் வேண்டும் (உ-ம்) கூட்டம் கூடுதல் மேலதிக வகுப்புக்கள் நடாத்துதல்.

இவற்றை நிவர்த்தி செய்வதற்கு நிறுவனத்தின் கணிதப் பகுதியில் போதிய தமிழ் அலுவல? இல்லாததே காரணம் என்று கூறப்படுகின்றது.

கணித, விஞ்ஞான ஆசிரிய நியமனங்கள்; இந்நெறியினைப் பயிலுகின்ற விஞ்ஞான கணித மாணவர்களுக்கு விரைவில் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படும் என அண்மையில் வெளியான கல்வித்திணைக்கள செய்திகள் கூறுகின்றன இது சார்பாக 11-6-79 ல் பத்திரிகையில் வெளியான செய்தி

(6-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

வேலணை மேற்கு சந்தையா இலுப்பிலணையின் காணி ஒன்பது பரப்பு செய்கைத் தறை. நிலப்பரப்பு ஆறு கொண்ட இ கல்வீடும் கிணறும். தொடர்பு: க. இலுப்பிலை, C/o ராஜ கோபால், நாவலடி ஒழுங்கை, திருநெல்வேலி. 3253

பூநகரி - இரசஞ்சி பிருந்தா வனம் தோட்டத்தில் எரு விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 1/2 47-வது ஒழுங்கை A, கொழும்பு 6. 3257

நூறு கோழி வளர்க்கக் கூடிய பாவித்த கோழிக்கூடு கழட்டிய நிலையில் விற்பனைக்கு உண்டு விபரங்களுக்கு: S திருநாவுக்கரசு, 213, கண்டி வீதி, அரியாலை. (மின்நறிலை முன்பாக) 3255

### தேவை

நல்லொழுக்கம், வேலையில் ஊக்கம் உள்ள கடைச்சிப்பந்திகள் தேவை. சைக்கிள் ஓடக் கூடியவர்கள் விரும்பத்தக்கது நற்சாட்சிப்பத்திரம் ஆகியவற்றுடன் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். தகுதிக்கேற்ப சம்பளம் கொடுக்கப்படும். ஸ்ரீ சாயி ஸ்ரோர்ஸ், 11/12, நவீனசந்தை, யாழ்ப்பாணம். 3252

### லொறி பொடி அடிப்பதற்கான கேள்விப் பத்திரம்

காரைநகர்
ப. நோ. கூ. சங்கம்,
காரைநகர்.

மேற்படி சங்க லொறி பொடி அடிக்கப்பட்டு பூர்த்தியாக்கப்படாத நிலையில் உள்ளது இதனை பூர்த்தி செய்ய கேள்விபத்திரங்கள் கோரப்படுகின்றன விண்ணப்பதாரர் குறை வேலையைப் பார்வையிட்டு தங்கள் கேள்விப்பத்திரங்களை 15-8-79 நண்பகல் 12 மணிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்,
கா. ப. நோ. கூ. சங்கம்.
6-8-79. 3254

### சுங்க ஏல விற்பனை

1979-ம் ஆண்டு ஆவணி மாதம் 13-ந் திகதி காலை 10 மணியளவில் யாழ்ப்பாண சுங்க அலுவலகத்தில் பின்வரும் பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். விற்பனையின் முழு நிபந்தனைகள் 1954-ம் ஆண்டு மே மாதம் 28-ந் திகதி வெளியிடப்பட்ட 10675-ம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 1-ம் பிரிவு 2ல் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

1. இந்தியாச் சாரங்கள்
2. கோட்டார் இயந்திர உதிரிப்பாகங்கள் (ஒயில் பிளேர்) ஒயில் சீல்
3. பீடி இலைகள்

எஸ்.எம்.ஜே. சேனரத்தின,
உதவி சுங்க சேகரிப்பாளர்,
யாழ். மாவட்டம்.

சுங்க அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
24 07-1979 3130

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## அறிவித்தல்

யாழ். மாநகரசபை

யாழ் மாநகர சபைக்குச் சொந்தமான வீடுகளை நில அளவை செய்வதற்கான

### கூறு விலை கோரல்

1. பின்வரும் வீடமைப்புத் திட்டங்களில் உள்ள வீடுகளை நில அளவை செய்து ஒவ்வொரு வீட்டிற்கும் மூன்று பிரதிகளுடன் கூடிய வரை படங்களைச் சமர்ப்பிப்பதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கூறு விலைகள் அங்கீகரிக்கப்பட்ட நில அளவையாளரிடமிருந்து 14-8-79-ந் திகதி பிற்பகல் 3-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

குருநகர் வீடமைப்புத் திட்டம் — 450 வீடுகள்
பாசையூர் வீடமைப்புத் திட்டம் — 8 வீடுகள்
நரிக்குண்டு வீடமைப்புத் திட்டம் — 22 வீடுகள்

2. கூறுவிலைகள் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான வீடுகள் நில அளவை செய்தல்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

3. மேலதிக விபரங்கட்கு யாழ். மாநகர மராமத்துப் பொறியியலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

க. சிவஞானம்,
மாநகராட்சி மன்ற ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.
6-8-79. 3256

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மாவட்ட நீதிமன்றம் பருத்தித்துறை

மரணசாதன நியாயாதிக்கம் இல: 1077/7

காலஞ்சென்ற புலோலி தெற்கு சேனாதி ராஜசேகரம் கைம்பெண் இலட்சுமிப்பிள்ளை என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்
சேனாதி ராசசேகரம் ஏகாம்பரநாதன்
புலோலி தெற்கு, புலோலி
மனுதாரர்

எதிர்
சேனாதி ராசசேகரம் கணேசராசா
புலோலி தெற்கு, புலோலி
எதிர்மனுதாரர்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979-ம் ஆண்டு ஆவணி மாதம் 24-ம் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர்தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி
ஒப்பம்
க. விஸ்வலிங்கம்,
பதிவாளர்.
1979-ம் ஆண்டு ஆனிமாதம் 18-ந் திகதி

இராமசாமி சதானந்தன்,
சத்தியப் பிரமாணமும் பிரசித்த நொத்தாரிசும்;
புலோலி தெற்கு.
புலோலி; 3095


# "மாணவசமூகம் நாட்டின் மூலவளங்களில் ஒன்று"

(உடுப்பிட்டி)

"நாட்டின் மூலவளமாகத் திகழும் மாணவ சமுதாயம் நல்லமுறையில் வழிநடத்தப்படவேண்டும். பொருளாதாரம், முன்னேற்றம் என்பனவற்றிற்காகப் போராடி நாட்டின் முன்னேற்றத்திற்கும், சமுதாயத்திற்கும் உழைக்கும் நல்லதலைவர்களாக உருவாகப்போகின்றவர்கள் அவர்களே"

இவ்வாறு வடமாநில கல்வி அதிபதி திரு தி மாணிக்கவாசகர் உடுப்பிட்டி சைவத் தமிழ்வித்தியாசாலை பரிசளிப்பு வைபவத்தில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "கல்லூரிகளுக்கு திடீர் என விஜயம் செய்து மாணவர்கள் ஆசிரியர்கள் தமது கடமைகளை சரியாகச் செய்கின்றார்களா? என்பதை பரிசோதிப்பதற்கு கல்வி அமைச்சர் திடீர்பரிசோதனைக் குழு ஒன்றை நியமித்துள்ளார் இது வரவேற்கப்படவேண்டியவிடயமாகும் ஆசிரியர்களும் மாணவர்களும் தமது கடமைகளை மேலும் சரிவரக் கவனிக்கக்கூடியதாக இருக்கும்" என்றார்

பரிசளிப்பு விழா கல்லூரி அதிபர் திரு அரியநாயகம் தலைமையில் நடைபெற்றது திருமதி மாணிக்கவாசகர் பரிசில்களை வழங்கினார். (கு)

# பீடாரோகண விழா

[சங்கானை]

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஸ்ரீலஸ்ரீ பரமாச்சாரிய சுவாமிகளின் 14வது பீடாரோகண விழா இம்மாதம் 15ம் திகதி புதன் கிழமை நடைபெறவுள்ளது.

காலை சாந்தி அபிஷேகம் நடைபெற்று மாலை பட்டணப்பிரவேசமும் இரவு விசேட கொலுபூசையும் இடம்பெறும்.

ஆதீனபிரதம சிவாச்சாரியார் "வேதாகம கிரியா பூஷணம்" கலாநிதி சு ஸ்ரீ ஸ்கந்தசாம்பசிவக் குருக்கள், "சைவபூஷணம்" சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக் குருக்கள் ஆகியோர் விழாவினை நடாத்தி வைப்பார்கள். (கு)

# "ஒருசமுதாயம் முழுமைபெற இறையருள் அத்தியாவசியம்"

[பண்டத்தரிப்பு]

"ஒரு சமுதாயம் முழுமை பெற்ற சமுதாயமாக மிளிர்வதற்கு இறையருள் இன்றியமையாதது. இப்பகுதி மக்கள் ஆன்மீகத்துறையிலும், கல்வித்துறையிலும், பொருளாதாரத்துறையிலும் முன்னேற்றம் காண்பதற்கு இன்று நூற்றாண்டு நிறைவுவிழாக் கொண்டாடும் இத்தேவாலயம் முக்கிய அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளது கண்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன்."

இவ்வாறு இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தின் நூற்றாண்டு நிறைவுதின விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அருளுரையாற்றுகையில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட் திரு கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை குறிப்பிட்டார்.

ஆலயத் திறந்தவெளியரங்கில் நடைபெற்ற இவ்விழாவில் பேராயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

"நூற்றாண்டுகள் என்பது ஒரு நீண்ட காலமாகும். இந்தச் சிறப்பு மிக்க ஆலயத்தை நிறுவியவர்களும், வழிநடத்தியவர்களில் பலரும் இன்று எம்மத்தியில் இருக்கமாட்டார்கள். ஆயினும் அவர்களின் குன்றாத இறைபக்தியின் அழியாச் சின்னமாக ஒற்றுமையின் நினைக்களமாக நிலையில்லாத இவ்வுலகின் நிலையான கடமைகளை எமக்கு நினைவூட்டும் வகையில் இந்த ஆலயம் இன்று சிறப்புடன் விளங்கி வருகிறது. ஆன்மீகத்துறையிலும், கல்வித்துறையிலும் ஒழுக்கத்துறையிலும் இப்பகுதி மக்களின் மேம்பாடு அடைவதற்கு இவ்வாலயம் சிறந்ததோர் சாதனமாக இருந்து வருவதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைய வேண்டும். எமது சந்ததியினர், இவ்வாலயத்தின் மகிமையை இன்னும் பல நூற்றாண்டுகளுக்கு கட்டிக் காத்துவருவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு."

இதனைத் தொடர்ந்து பேராயர் ஆலய முன்றலில் நூற்றாண்டு நிறைவுதினத்தை முன்னிட்டு நிறுவப்பட்ட புனித யாகப்பரின் நினைவுச் சின்னத்தைத் திரைநீக்கம்செய்துவைத்தார். இவ்விழாவில் அருட்திரு எஸ் ஜே இராசநாயகம் அடிகளார், முன்னாள் பங்குத்தந்தை அருட்திரு எஸ் டெய்சி அடிகளார் உட்படப் பலர் உரையாற்றினார்கள்.

நடிகமணி வி வைரமுத்து குழுவினரின் "ஞானசௌந்தரி" நாடகமும் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. நூற்றாண்டுவிழா மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. விழா நிகழ்ச்சிகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ப்பிரிவினர் ஒலிப்பதிவு செய்தனர். (க)

# "மனிதன் இன்பமாக வாழ கலை, கலாச்சார நிகழ்ச்சிகளை நடாத்த வேண்டும்"

(வேலணை)

"மனிதன் இன்பமாக வாழ கலை, கலாச்சார நிகழ்ச்சிகள் உதவுகின்றன. எனவே ஒவ்வொரு கிராமங்களிலும் கலை, கலாச்சார நிகழ்ச்சிகளை நடாத்த சனசமூகநிலையங்கள் முன்வரவேண்டும்"

இவ்வாறு யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். பி ஜெகநாதன்

(6-ம் பக்கம் பார்க்க)

# "தமிழ்ப்பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை ஒருபோதும் அனுமதியோம்" — நீதி அமைச்சர் 'தேவா'

[மட்டக்களப்பு]

"பலம் வாய்ந்த அரசாக எமது ஐக்கியதேசியக் கட்சி அரசாங்கம் இருக்கிறது. அதிகாரம் உடையவர்களாக அதில் நாம் இருக்கின்றோம். அதன்படி இந்நாட்டின் தமிழ்பகுதிகளில் சிங்கள குடியேற்றங்கள் நடைபெற ஒருபோதும் இடமளிக்காட்டோம்"

இவ்வாறு நீதி அமைச்சர் திரு. கே. டபிள்யூ தேவநாயகம் செங்கலடியிலுள்ள பழைய ஊர் என்னுமிடத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்

ஏறாவூர் உதவி அரசாங்க அதிபர் திரு. இ மோனகுருசாமி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டம் ஆரம்பமாவதற்கு முன் நீதி அமைச்சர் அவரது இல்லத்திலிருந்து ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார்

திரு. தேவநாயகம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"மதுருஓயாத் திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நடைபெறவிருப்பதாக பொய்ப் பிரசாரங்கள் மக்கள் மத்தியில் செய்யப்படுகின்றன. ஒரு போதும் சிங்களக் குடியேற்றங்கள் நடைபெறமாட்டா.

"இரண்டு வருட காலத்தில் கல்குடா தொகுதியில் நடைபெற்றுவரும் பல முன்னேற்றங்கள் நாம் மக்களுக்கு வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவருகிறோம் என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.

மட்டக்களப்பு மாவட்ட அமைச்சர் திரு எம் கனகரத்தினம் உட்படப் பலர் இக் கூட்டத்தில் உரையாற்றினர் (ஆ)

# பருத்தித்துறை நகரம் நவீனமயமாகும்

[புலோலி]

பருத்தித்துறை நகரை அழகு படுத்துவதுடன் பருத்தித்துறை பஸ் நிலையத்தையும் விஸ்தரித்து நவீனமயமாக்குவதற்கான நடவடிக்கைகளைப் பருத்தித்துறை நகரசபைத் தலைவர் திரு ம வேலுப்பிள்ளை மேற்கொண்டுவருகிறார். இதன் மூலம் பஸ் பிரயாணிகளின் நீண்டகாலக் குறைபாடு நீங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் முதற்கட்டமாக பஸ் நிலையத்தை ஊடறுத்துச் செல்லும் பாதை போக்குவரத்திற்காக மூடப்பட்டு பஸ் நிலையம் விஸ்தரிக்கப்படவுள்ளது. கடற்கரைவீதி வழியாகச் செல்லும் சகல பஸ் வண்டிகளும் சந்தையின் மேற்குப் புறத்தில் நிறுத்தப்பட்டு அங்கிருந்து புறப்பட்டுச் செல்லும் ஏனைய பஸ் வண்டிகள் வழமையான இடத்திலிருந்து புறப்பட்டுச் செல்லும். சந்தையின் மேற்குப்புற வீதி ஒரு வழிப்பாதையாக அமைக்கப்படுவதுடன் பருத்தித்துறை- யாழ்ப்பாணம் 750 ம் இலக்க வீதியை அகலித்து வீதியின் நடுவில் பூஞ்செடிகள் அமைத்து பருத்தித்துறை நகர் அழகுபடுத்தப்படவுள்ளது.

வேலாயுதம் மகாவித்தியாலயம், பஸ் டிப்போ ஆகிய இடங்களில் உள்ள வீதி வளைவுகளும் விசாலித்து நேராக்கப்படவுள்ளன.

மக்கள் சந்தையில் தற்போது உள்ள மலசலகூடம் மக்களின் நன்மைகருதி மூடப்பட்டு மீன் சந்தையில் புதிதாக இரு மலசல கூடங்கள் அமைக்கப்படுவதுடன் பஸ் நிலையத்திலும், மீன் சந்தையிலும் குழாய் மூலம் நீர் விநியோகம் செய்வதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படவுள்ளன [உ]

# ஆலயவழிபாட்டில் நம்மிடம் கட்டுப்பாடு இல்லையே'

## எதிர்க்கட்சித்தலைவர் 'அமிர்' கவலை

(உடுப்பிட்டி)

"ஏட்டுக் கல்வி சமுதாயத்திற்கு உயர்வைக் கொடுக்க முடியாது. பரீட்சைகளில் தேர்ச்சி பெறுபவர்கள் சிலர். தவறுபவர்கள் பலர். தவறியவர்கள் தான் விரக்தியடைந்து வாழ்க்கையை மாசுபடுத்தியுள்ளனர். எமது இளைஞர்களின் நல்வாழ்விற்குச் சாரணியத்துவம் சிறந்த முறையில் வழியமைத்துள்ளது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பனவற்றைச் செயல் ரீதியாக எமக்குப் போதிக்கும் சாரணதத்துவத்தைப் பின்பற்றினால் பிரச்சினைகள் என்பதற்கே இடமில்லை",

இவ்வாறு இலங்கைச் சாரணர் சங்க உபபோஷகரும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு. ஏ. அமிர்தலிங்கம் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியில் நடைபெற்ற சாரணர் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் கூறினார்.

சாரணிய மாணவர்களின் பொருட்காட்சியையும் அவர் பார்வையிட்டுப் பாராட்டினார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"கட்டுப்பாடில்லாத இனம் தமிழ் இனம் தான். பௌத்த ஆலயங்களில் பௌத்த சகோதரர்கள் ஒழுங்காக கட்டுப்பாட்டுடன் வழிபடச் செல்கின்றார்கள். ஆனால் எங்கள் ஆலயங்களிலோ வழிபடச் செல்கின்றவர்கள் ஒருவரை ஒருவர் இடித்து, மிதித்து முண்டியடித்துக் கொண்டு செல்கின்றார்கள். ஒழுங்கு கண்ணியம் கட்டுப்பாடு எமது சமுதாயத்திற்குப் புகட்ட வேண்டிய ஒரு பாடமாகும். எவ்வாறு கட்டுப்பாடின்மை நிலை புகுந்ததோ தெரியவில்லை. சாரணியம் ஒழுங்கு, கண்ணியம், கட்டுப்பாட்டைத் தெளிவாக விளக்குகின்றது. இளைஞர்களைப் பொறுத்த வரையில் சாரணியம் சிறந்த சுபிட்சப் பாதைக்கு இட்டுச் செல்கின்றது.

"ஒரு நாட்டின், கிராமத்தின் வளர்ச்சி அப்பகுதியில் உள்ள ஆலயம், கல்லூரி போன்ற வற்றின் பெருமையிலும், வளர்ச்சியிலும் தான் தங்கியுள்ளது. பூரணத்துவம் பெற்ற இளைஞர் சமுதாயத்தை வளர்த்துக் கொடுக்க இக்கல்லூரி தொடர்ந்து உழைக்க வேண்டும்"

பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் பேசுகையில்:

"இன்று இளைஞர்கள் பாடசாலைகளில் நடைபெறும் விளையாட்டுக்களிலோ, சாரணர் இயக்கங்களிலோ பங்குபற்றுவதில்லை. அவர்கள் ரியூட்டரிகளை நாடியே ஓடுகின்றார்கள். இது கவலைக்குரியதாகும். வெறும் கல்வியுடன் நின்றுவிடுவதாலேயே எமது இளைஞர்கள் உலக ஞானம் அற்றவர்களாக இருக்கின்றனர்" என்றார்.

சாரணர் அணிவகுப்பும், சாகஸ நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. யாழ் மாவட்டச் சாரண உதவி ஆணையாளர் திரு. ஜே. எம். பொன்னையா, உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராஜலிங்கம், வல்வை நகர சபைத் தலைவர் திரு. என். ஞானமூர்த்தி, உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வி. கே. ஈசுரபாதம் ஆகியோரும் உரையாற்றினர். [அ]

### இலட்சார்ச்சனை

[யாழ்ப்பாணம்]

அளவெட்டி தலைவர்க்கிரி முத்துமாரி அம்மன் கோவில் இலட்சார்ச்சனைப் பூர்த்தி நாளான இன்று காலை சங்காபிஷேகமும் மாலை அர்ச்சனையும் அலங்கரிக்கப்பெற்ற தண்டிகையில் அம்பாள் வீதி வலம் வருதலும் நடைபெறும். [கு]

### மண்டலாபிஷேக 25வது நாள் இன்று

[யாழ்ப்பாணம்]

வண்ணை செந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோவில் மண்டலாபிஷேக விழாவின் 25வது தினமான இன்று காலை மஹாபிஷேகமும் ஸ்நபன கும்பாபிஷேகமும் விசேஷ பூஜைகளும் நடைபெறும்.

இரவு சாயரட்சை பூஜை வசந்தமண்டப பூஜை என்பன நடைபெற்று சுவாமி வீதியுலா வருவார். [கு]

### மக்கள் கருத்து

### மார்புநோயாளி ஒருவரின் பிரச்னைகள்

நான் கல்வியமைச்சில் காரியாலய உதவியாளராகக் கடந்த 18 வருடங்களாகக் கடமையாற்றுகின்றேன். கடந்த ஒரு வருடமாக மார்புநோயால் பீடிக்கப்பட்டு மயிலிட்டியில் சிகிச்சைபெற்றுக் குணமாகிவருகின்றேன். தொடர்ந்து ஆறு மாதங்களுக்கு எனக்குச் சம்பளம் தந்து வந்தார்கள். கடந்த ஐந்து மாதங்களாக சம்பளத்தை நிற்பாட்டிவிட்டார்கள். வைத்தியசபைக்குப் போகும்படி கல்விப்பகுதியினரிடமிருந்து கடிதங்கள் வந்த இருமுறையும் மயிலிட்டிக்கும் பண்ணைக்கும் சென்றேன். அங்குள்ள தலைமை டாக்டர் வெளிநாடு சென்றுள்ளதால் வைத்தியப்பரிசோதனை வைக்க முடியாது இருப்பதாகக்கூறித் திருப்பி அனுப்பிவிட்டார்கள். ஏமாற்றத்துடன் திரும்பினேன். திரும்ப அறிவிப்பதாகக் கூறினார்கள். இதுவரை ஒரு பதிலும் இல்லை.

பிள்ளைகுட்டிக்காரனாகிய எனக்கு, கூப்பன்களும் இல்லை. சுகவீனத்திற்காக அரசினர் வழங்கும் லீவும் இல்லை; சம்பளமும் இல்லை; ஏழையாகிய நாங்கள் எவ்விதம் சீவிப்பது? தயவுசெய்து கூடிய சீக்கிரம் வைத்தியப்பரிசோதனையை வைத்துக் கடமைபுரியவோ அல்லது இளைப்பாறவோ உரிய ஒழுங்குகளைச் செய்வித்துத் தந்து எனது சம்பளத்தைப் பெறவேண்டிய வழிவகைகளைச் செய்து தரும்படி சுகாதார அமைச்சைத் தாழ்மையாக வேண்டுகிறேன்.

ச. சபாரத்தினம்
ஆடியபாதம் றோட்,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

### தேவாலயத்தை புனரமைக்க நடவடிக்கை

[உடுப்பிட்டி]

பிரசித்திபெற்ற கொழும்புத்துறை புனித சூசையப்பர் தேவாலயத்தை 30.000 ரூபா செலவில் புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகளைப் பங்குக்குரவர் வண. பிதா ரீ. எம். இராசநாயகம் மேற்கொண்டு வருகின்றார்.

மிகவும் பழமையும் பெருமையும் வாய்ந்த இத் தேவாலயத்தை அழிவில் இருந்து மீட்பதற்கான நிதி உதவிகளை வழங்கி உதவுமாறும் பங்குக்குரவர் வேண்டுகோள்விடுத்துள்ளார். [கு]

### வட்டுக்கோட்டைக்கு 287 ஆசிரியர்கள் தேவை

[சித்தன்கேணி]

வட்டுக்கோட்டையிலுள்ள அரசினர் பாடசாலைகளுக்கு மொத்தம் 287 ஆசிரியர்கள் தேவைப்படுகின்றார்கள்.

வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள பாடசாலைகளின் தேவைகள் பற்றி ஆலோசனை செய்யவென வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசுவினால் நியமிக்கப்பட்ட ஆலோசனைச் சபையினர் ஆலோசனை நடாத்தியபின்னர் இத் தகவலைத் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து ஆசிரியர்கள் பற்றாக்குறையால் மாணவர்கள் மிகவும் பாதிப்படைவதாகவும் உடனடியாக அவற்றை நிறைவேற்றித் தருமாறும் கல்வி அமைச்சுக்கு வட்டுக்கோட்டை எம். பி. வேண்டுகோள் விடுத்துள்ளார். [கு]

### "நீதி இல்லாத இடத்தில் சமாதானம் இராது"

[சாவகச்சேரி]

"சமாதானம் நிலைபெற வேண்டுமானால் நீதி நிலைநாட்டப்படல்வேண்டும். சமாதானம் இல்லையென்றால் அங்கு நீதியில்லை என்பதுதான் அர்த்தம்."

மிருசுவில் கவியரசு பண்டிதர் பீ. மூ. ஞானப்பிரகாசம் சமாதான நீதிபதியாக நியமனம் பெற்றதை முன்னிட்டு அன்னாரைக் கௌரவிக்குமுகமாக நடாத்தப்பட்ட பாராட்டு விழாவிற்கு மிருசுவில் பங்குக்குரவர் வண. பிதா பற்றிக் ஞானப்பிரகாசம் அடிகள் தலைமைவகித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

பண்டிதர் ஞானப்பிரகாசத்தின் குணநலன்களைப் பாராட்டிப் பேசிய அடிகள், அன்னாரது இந்நியமனம் பெருமைக்குரியது எனக் குறிப்பிட்டார்.

சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சி. இராசநாயகம் பேசுகையில், இளைஞர்கள் பண்டிதர் ஞானப்பிரகாசத்தின் வழி நின்று அவர்தம் புத்திமதிகளைச் செவியுற்றால் இக்கிராமத்தில், இவரைப் போன்ற பெரியார்கள் மேலும் தோன்றமுடியுமெனக் குறிப்பிட்டார்.

மிருசுவில் றோ. க. வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி விழாவில் இளைப்பாறிய அதிபர் திரு. பீ. எஸ். நிக்கலஸ், சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திரு. எஸ். கே. திரவியநாயகம், பண்டிதர் செ. சிவலிங்கம், வரணி மகாவித்தியாலய அதிபர் பொ. கந்தையனார் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர். இசைப்புலவர் சி. செல்வத்துரை பாராட்டும் பாபாடினார். திருமணி பூமணி இராசரத்தினம் வாழ்த்துப்பா பாடினார். [அ]

இன்று நல்லை முருகன் 11-ம் திருவிழா:

### தருவாய் இன்பம் தயவாயே

நல்லைப் பதிவாழ் திருமுருகா
எல்லை இல்லாப் பெருங்கடலே
இல்லை உனைப்போல் இனியவரே
தொல்லை தீர்க்க வருவாயே!

வேலைக் கொண்டு வினைதீர்க்க
வேண்டும் போது வருவாயே
பாலைப் பழிக்கும் முகத்தோனே
பாபம் தீர்க்க வருவாயே!

முருகும் தமிழும் ஒன்றாக
மோகம் கொண்டு மயில்மீதில்
உருவாய் அருவாய் உயர்வோனே
தருவாய் இன்பம் தயவாயே.

--சின்னச்சாமி
தென் மட்டுவில்.

### சம்பள முரண்பாட்டை நீக்கக் கோரிக்கை

(உடுப்பிட்டி)

ஒரே அமைச்சின் கீழுள்ள இரு திணைக்களங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கிடையில் நிலவும் சம்பள வேறுபாட்டை நீக்கிச் சமசம்பளமாக்கித் தரும்படி பாதிக்கப்பட்ட ஊழியர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

காணி, விவசாய அமைச்சின் கீழ் கடமைபுரியும் கமநலச் சேவைத் திணைக்கள வெளிக்கள உதவியாளர்களுக்கும், விவசாயத் திணைக்களத்தில் பணிபுரியும் விவசாய விஸ்தரிப்புச் சேவையாளர்களுக்கும் வழங்கப்பட்டுவரும் சம்பளத்திலேயே பாகுபாடு காட்டப்பட்டுவருவதாகச் சம்பந்தப்பட்ட ஊழியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கமநலச் சேவைத் திணைக்களத்தைச் சேர்ந்த வெளிக்கள உதவியாளர்களே இது பற்றிக் குரல் எழுப்பியுள்ளனர். இரு திணைக்களங்களைச் சேர்ந்த பிரஸ்தாப ஊழியர்கள் ஒரே தரத்திலேயே கொண்டவர்களாக இருந்தபோதிலும் இவர்களுக்கிடையே அடிப்படைச் சம்பளத்தில் இவ்வித்தியாசம் எவ்விதம் வந்தது என்று பாதிக்கப்பட்ட கமநலச் சேவை வெளிக்கள ஊழியர்கள் கேட்கின்றனர்.

இது சம்பந்தமாகக் காணி, விவசாய அமைச்சருக்கு மகஜர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. [அ]

சமய அறிவுப் போட்டி

### பரிசளிப்பு விழா

[யாழ்ப்பாணம்]

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் திருவிழாவை முன்னிட்டு வைமன் இந்து இளைஞர் இயக்கம் நடாத்திய சைவ சமய அறிவுப்போட்டி பரிசளிப்பு விழா இம்மாதம் 22ம் திகதி இரவு நடைபெறும்.

போட்டிக்கான வினாக்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களை இயக்கத்தினர் தற்போது வைமன் வீதி தாகசாந்தி நிலையத்தில் வைத்து விநியோகித்துவருகின்றனர். [கு]

### வட்டு. இந்துவில் கலந்துரையாடல்

[சித்தன்கேணி]

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி உயர்தர மாணவர் மன்ற தமிழ்த்துறையினர் ஒழுங்கு செய்த கலந்துரையாடல் கல்லூரி மண்டபத்தில் கல்லூரி உப அதிபர் திரு எம். திருநீலகண்டசிவம் தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் சிறப்பு பிரதிநிதிகளாக 'தமிழ் மொழியில் திறனாய்வும் கவிதை நயமும்' என்ற பொருள்பற்றி யாழ் பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளர் திருமதி சித்திரலேகா மௌனகுருவும், 'இக்கால தமிழ் இலக்கண மாற்றங்கள் இலக்கிய வரலாற்று தொடர் வளர்ச்சி' என்ற பொருள்பற்றி யாழ் ஒஸ்மானியாக் கல்லூரி தமிழ் விரிவுரையாளர் திரு. மௌனகுருவும் கலந்துகொண்டு சிறப்புரை வழங்கினார்கள்.

மாணவரது பரீட்சை நோக்கில் மூன்று மணித்தியாலங்களுக்கு மேலாக நடைபெற்ற கலந்துரையாடலில் கல்லூரி மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்குபற்றியது குறிப்பிடத்தக்கது. [கு]

### வல்லிபுர ஆழ்வார் பூஜைகள்

[பருத்தித்துறை]

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் பூஜை ஒழுங்குகளில் மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அடியார்களின் வசதியை முன்னிட்டு காலை 6-30 மணிக்கும் உச்சிக்காலப் பூஜை பகல் ஒரு மணிக்கும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. [அ]

### 3 லட்சம் ரூபா வசூலாகியது

[வண்ணார்பண்ணை]

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் கடந்த மாதம் நடைபெற்ற வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு சுமார் மூன்று லட்சம் ரூபா வசூலாகியது என்று தீவுப்பகுதி பஸ் பிரயாணிகள் சங்கத்தின் தலைவர் திரு. பி. ஜே. அலோசியஸ் தெரிவித்தார்.

தீவுப்பகுதியிலுள்ள முக்கிய யாத்திரை ஸ்தலங்களான நயினாதீவு நாகபூசணி அம்மன் உற்சவம், வேலணை சாட்டி இந்தாத்திரைமாதா உற்சவம், கச்சதீவு அந்தோனியார் உற்சவம் ஆகிய ஆலய உற்சவங்களுக்கு நடத்தப்படும் விசேட பஸ் சேவைகள் மூலமும், பாலைதீவு யாத்திரிகர்களுக்கென மண்டைதீவு ஊடாக நடைபெறும் உற்சவகால் பஸ் சேவைமூலமும் வடபிராந்திய இ.போ.ச.க்கு வருடந்தோறும் பல லட்சம் ரூபா வருமானம் கிடைத்துவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தீவுப்பகுதிக்கென தனியான பஸ் டிப்போ ஒன்றை விரைவில் நிறுவ நடவடிக்கை எடுக்குமாறு தீவுப்பகுதி பிரயாணிகள் சங்கம் போக்குவரத்து அமைச்சுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் இந்த வருமான விபரங்களை தாம் சுட்டிக்காட்டியுள்ளதாகவும் திரு. அலோசியஸ் தெரிவித்தார். [கு]

## வறுமை; வகுப்புவாதம் ஒழிய

# புதிய அரசு ஆதரவு

# கோருகிறார் 'ராஜ்'

பட்னா, ஆக. 7 ஏஎவ்.

"வகுப்புவாதம், வறுமை ஆகியவற்றை எதிர்த்துப் போராட திரு. சரண்சிங்கின் புதிய மதசார்பற்ற அரசுக்கு ஒத்துழைப்பு நல்க சகல இந்திய மக்களும் முன்வரவேண்டும்."

இவ்வாறு ஜனதா கட்சித் தலைவர் திரு. ராஜ்நாராயண் வேண்டுகோள் விடுத்துள்ளார். பட்னாவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அவர் மேலும் பேசுகையில், ஜனதா கட்சியில் மதச் சார்பற்ற கொள்கை உடையவர்களுக்கு இடமே கிடையாது. எனவேதான் நாம் எல்லோரும் அக்கட்சியிலிருந்து விலகினோம் என்றார். [இ]

# நோயின் கொடுமை தாங்காது தற்கொலை

[புலோலி]

நோயின் கொடுமையைத் தாங்க முடியாத மூன்று பிள்ளைகளின் தந்தையொருவர் கிணற்றுள் பாய்ந்து உயிரைப் போக்கிக்கொண்டார்.

புலோலி புற்றளையைச் சேர்ந்த கிகையலங்காரிப்பாளரான வயிரவன் பசுபதி (வயது 68) என்பவரே கிணற்றுள் பாய்ந்து தனது உயிரைப் போக்கிக்கொண்டவராவார். வடமராட்சிப்பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எம். வி. புவனேந்திரன் விசாரணையை மேற்கொண்டார். பருத்தித்துறைப் பொலிசார் சாட்சியங்களை ஆஜர் செய்தனர்.

இறந்தவரது மனைவி பொன்னம்மா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:- இறந்தவர் எனது கணவன். நான் இவரை 38 வருடங்களுக்கு முன் திருமணம் செய்தேன். எங்களுக்கு மூன்று பெண் பிள்ளைகள் இருக்கிறார்கள். ஒருவரும் திருமணம் செய்யவில்லை. இறந்தவர் கடந்த மூன்று வருடங்களாகச் சொறி வருத்தத்திலும், புற்று நோய் வருத்தத்திலும் ஆளாகியிருந்தார். எதுவித சிகிச்சைகள் மேற்கொண்டும் இவரது நோய்கள் குணமடையவில்லை. கடந்த ஒரு மாதகாலமாக நோயினால் கடுமையாக அவஸ்தைப்பட்டார். இவர் நோயினால் அவஸ்தைப்படும் நேரங்களில் தான் இருப்பதைவிட இறப்பதே நல்லது என்று கூறுவார். சம்பவ தினத்தன்று நோய் தாங்க முடியாமல் அங்கும் இங்கும் ஓடித்திரிந்தார். பின்னர் எட்டு மணிபோல் [இரவு] படுக்கைக்குச் சென்றார். நான் வழமையாக இரவு 11 மணிபோல் இவருக்குப் பால்கொண்டுபோய் படுக்கையில் கொடுப்பது வழக்கம். அன்றும் வழமைபோல் பாலைக் கொண்டு சென்றேன். ஆனால் அவர் படுக்கையில் இல்லை. எனவே நான் அவர் வெளியே சென்றிருப்பார் வருவார் என எதிர்பார்த்திருந்தேன். ஆனால் அவர் வரவில்லை. இரவு முழுவதும் அவரைக் காணவில்லை. விடியற்காலை தொடக்கம் அவரைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டோம். அப்போது புற்றளை பிள்ளையார் கோவில்கிணற்றடியில் அவரது உடுப்புகள் கிடக்கக்கண்டு கிணற்றுள் பார்த்தபோது, அவர் கிணற்றுள் கிடந்தார். நான் உடனே குளறினேன். அயலவர்கள் வந்து கூடிவிட்டார்கள். அவரை கிணற்றுக்குள் இருந்து வெளியே எடுக்கும்போது அவர் இறந்துவிட்டார். இவர் நோயின் கொடுமை தாங்கமுடியாதபடியினாலேயே கிணற்றுள்விழுந்து இறந்திருக்கலாம் என நம்புகிறேன்.

புலோலி தெற்கு கிராம சேவை அலுவலர் திரு. வேலாயுதபிள்ளையும் சாட்சியமளித்ததை அடுத்து தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

# பொன்னாலை தேர்வேலைகள் துரிதம்

[சுழிபுரம்]

பொன்னாலை ஸ்ரீ வரதராசப் பெருமாள் கோவில் புதிய தேர் செய்வதற்கான வேலைகள் மிகவும் துரிதமாக நடைபெற்று வருகின்றன. தமிழக சிற்பக் கலைஞர் திரு. எஸ். ஏகாம்பரம் ஸ்தபதியார் தலைமையில் சிற்பக் கலைஞர்கள் வேலைகளைச் செய்து வருகின்றனர். மேலும் சில சிற்பாசாரிகளைத் தமிழகத்திலிருந்து அழைத்துவர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அடுத்த ஆண்டு புதிய தேர் பூர்த்தியாகும் வெள்ளோட்டம் அடுத்த ஆண்டு நடைபெறும் ஆவணி மாதத்திருவிழாவுக்கு முன்னர் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# கொடிகாமம் நவீனசந்தை

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் நவீன மார்க்கட் வேலைகள் இவ்வருட இறுதிக்குள் பூர்த்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது கட்டட வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

சந்தையின் இருபக்கங்களில் முச்கோண அமைப்புக் கொண்ட நவீன கடைகளும் மற்றொரு பக்கத்தில் தபால் கந்தோர் வங்கி ஆகியவற்றிற்கான கட்டடமும் அமைக்கப்படும்.

மீன், இறைச்சிக்கடைகளும், சைக்கிள் பார்க், மற்றும் நவீன மலசலகூடமும் அமைக்கப்படும்.

புதிய மண்டபம் ஒன்றும் அமைக்கப்பட்டு வருகிறது. [க]

# அறிவு வளர்ச்சிக்கு ஆங்கிலம் முக்கியம்

[கொழும்புத்துறை]

"மாணவர்கள், தாய்மொழிக் கல்வியில்மாத்திரமன்றி, சர்வதேச மொழியாகிய ஆங்கிலத்திலும் போதிய தேர்ச்சி பெறவேண்டும். அறிவு வளர்ச்சிக்கு ஆங்கில அறிவு இன்றியமையாததாகும்."

இவ்வாறு ஆங்கிலக் கல்வி அதிகாரி திருமதி ஜே. ஜி. வாணர் கொழும்புத்துறை துரையப்பா மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற ஆங்கில தின விழாவில் தலைமைதாங்கி இப் பேசுகையில் தெரிவித்தார். மேற்படி விழாப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கு திருமதி வாணர் பரிசில்களை வழங்கி மேலும் பேசுகையில், வித்தியாலய அதிபர் திரு. இரா. செல்வராசாவின் நிர்வாகத்திறனையும், குறுகிய காலத்தில் மிகச் சிறப்பான நிகழ்ச்சிகளைத் தயாரித்தளித்த ஆங்கில ஆசிரியை திருமதி

யோ. இராசசிங்கத்தின் சேவைகளையும் பாராட்டினார்.

மேற்படி வித்தியாலய பிரதான மண்டபத்தில் ஆங்கில கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இவ்விழாவில் பெற்றோர்கள், மாணவர் கலந்துகொண்டனர். ஆசிரியர்கள் திரு. எஸ். எம். நவரத்தினம், திரு. நா. புல்லேநாயகம் ஆகியோர் நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தினார்கள். [ஈ]

# வெள்ளிவிழாக் கொண்டாடுவர்

[வண்ணார்பண்ணை]

கோப்பாய்த் தொகுதியைச் சேர்ந்த ஆவரங்கால் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெள்ளி விழாவை எதிர்வரும் 24, 25ந் திகதிகளில் நடாத்தச் சங்கம் முடிவுசெய்துள்ளது. இச்சங்கப் பிரிவுடன் இணைந்த ஆவரங்கால் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், ஆவரங்கால் மத்திய சனசமூகநிலையம் ஆகியன ஒன்றிணைந்து இந்த வெள்ளிவிழாவை நடாத்த ஏற்பாடு செய்துவருவதாக மேற்படி சங்கத் தலைவரும், வெள்ளிவிழாக் குழுத் தலைவருமான திரு க. சின்னத்துரை தெரிவித்தார். (அ)

# "விளையாட்டும் வாழ்க்கைக்குப் பயன்படும்"

(புலோலி)

"விளையாட்டுக்களும், எமது வாழ்க்கைக்கு இன்றியமையாதன. கல்வியையும், விளையாட்டையும் பயன்படுத்தி மனச்சாட்சியை வழிகாட்டியாகவைத்து வாழ்க்கை என்னும் வண்டியில் பிரயாணம் செய்யும்போது எத்தனையோ சிறந்த இலட்சியங்களை எய்த முடியும்."

இவ்வாறு பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியின் வருடாந்த இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய கப்டன் சின்னையா குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திரு. டபிள்யூ. என். எஸ். சாமுவேல் தலைமையில் இப்போட்டி நடைபெற்றது.

ஏபிரகாம் இல்லம் முதலாவது இடத்தைப் பெற்றுக் கொண்டது. வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களை திருமதி சின்னையா வழங்கினார். (அ)

# சுடலையில் வயோதிபர் தற்கொலை

[சங்கானை]

சாவைப்போலதாக அடிக்கடி கூறிவந்த வயோதிபர் ஒருவர் இறுதியில் சுடலையிலேயே தற்கொலைசெய்துகொண்ட சம்பவம் ஒன்று சங்கானையில் நடைபெற்றுள்ளது.

இறந்தவரான முருகன் [வயது 75] சில வருடங்கள் சங்கானையில் தனது மருமகனுடன் வசித்து வந்ததாகவும் சம்பவதினம் எவருக்கும் தெரியாமல் கரச்சி வயல்வெளியில் இருக்கும் சுடலைக்குச் சென்று நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலைசெய்து கொண்டாராம்.

இறந்தவரின் மருமகன் ஆறுமுகம், குஞ்சன் கந்தையா ஆகியோரின் சாட்சியங்களைத் தொடர்ந்து திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. வே. சேனாதிராசா தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (கு)

## சுவட்டுமைதான விளையாட்டு

# அ.இ. பாடசாலைகள் போட்டி: செப். 13-ம் திகதி ஆரம்பம்

[உடுப்பிட்டி]

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான சுவட்டு மைதான விளையாட்டுப் போட்டி செப்டெம்பர் 13-ம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

15-ம் திகதிவரை நடைபெறும் இவ்விளையாட்டுப் போட்டி பதுளை பொது மைதானத்தில் நடைபெறும். இதற்கான ஒழுங்குகளை பண்டாரவளைப் பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு. இல்லா கவனித்து வருகின்றார்.

விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளும் பிற மாவட்டங்களைச் சேர்ந்தபோட்டியாளர்களின் போக்குவரத்து வசதிகளை முன்னிட்டுக் கொழும்பில் இருந்து பதுளை வரை விசேஷ புகையிரத சேவைகளும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

இவ்விசேஷ ரயில் சேவை செப்டெம்பர் மாதம் 12-ம் திகதி காலை கொழும்பில் இருந்து பதுளை வரையும், 16-ம் திகதி காலை பதுளையிலிருந்து கொழும்பு வரையும் சேவையிலீடுபடும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. [அ]

# இன்றைய பலன்

ஆடிமாதம் 23-ம் திகதி

[புதன்கிழமை]

[8-8-1979]

**மேடம்:** இலாபகரமான தொழிலில் முதலீடு செய்வீர்கள், வாகனச் சொந்தக்காரர்களுக்கு அதிக வருமானம் கிடைக்கும், தாய்வழியால் தனவரவுக்கு இடமுண்டு, குடும்பவாழ்க்கையில் சுமுகமான சூழ்நிலை தென்படும், நல்ல நாள்.

**இடபம்:** காரியம் யாவிலும் கைகொடுத்து உதவுவதற்கு ஒருவர் முன்வருவர், உங்கள் சீரிய நோக்கம் எங்கும் சிறப்பைத் தேடித் தரும், தானதருமங்களில் விருப்பம் மேலிடும், இலவம் என்றது கட்டி வெல்லச்,

**மிதுனம்:** வெளியிடத்துப் பயணம் மேற்கொள்ளப்படலாம், உடல் நலத்தை பேணவும், வாட்டிவிடும் பிணியும் தானே.

**கடகம்:** பொன்னான வாழ்வு பெண்ணாலே கிட்டும், கண்ணியம் கடைப்பிடிக்கும், கடமையும் சிறக்கும்.

**சிங்கம்:** கோஷ்டிச் சண்டையில் உங்களையும் மாட்டிவிடுவதற்குச் சிலர் முனையக்கூடும், கொடுக்கல் வாங்கல் மூலம் பகை உருவாகலாம், மேலதிகாரியின் கோபத்துக்கு இலக்காகுவீர்கள், துக்கதினம்.

**கன்னி:** பொதுப்பணி மூலம் புகழுக்கு இடமுண்டு, அரசியல்வாதிகளுக்கு அதிர்ஷ்டம் அடிக்கலாம், பிதாவழி மூலம் பொருள்வரவு கிடைக்கும், தரும காரியங்களில் விருப்பு மேலிடும்.

**துலாம்:** எதிலும் ஒரு மாற்றத்தை விரும்புவீர்கள், மனதில் புதிய எண்ணங்கள் வட்டமிடும், வியாபாரிகளுக்கு அதிக ஆதாயம் கிடைக்கக்கூடும், உல்லாசப் பயணமொன்று மேற்கொள்ளப்படலாம்

**விருச்சிகம்:** பொருள் சட்டுவதில் புதிய வழிகளைக் கையாளுவீர்கள், எதையும் சிறப்பாகச் சாதிப்பதில் முதலிடத்தைப் பெறுவீர்கள். மக்களாலும் மகிழ்ச்சிக்கு இடமுண்டு, உத்தியோக உயர்வும் கிடைக்கும்.

**தனுசு:** கழுகுப்பார்வை வட்டமிடும், காத்திருப்பர் பகைவர், நிதி நெருக்கடி டியைத்தவிர்க்க மதிவழி நில்.

**மகரம்:** ஆத்திரப்படுவதால் நண்பர்களைப் பகைத்துக் கொள்ளுவீர்கள். எழுத்து மூலம் தொடர்பு கொள்வதை இன்று தவிர்த்துக் கொள்ளவும், குழந்தை ஒன்றின் உடல் நலம் பாதிக்கப்படக் கூடும்.

**கும்பம்:** வாழ்க்கைப் பூங்காவில் வசந்தம் நிலவும், சுபகருமங்கள் நடைபெறும், சுற்றமும் சூழும்.

**மீனம்:** அவசரக்கோலம் தலைகாட்டும், அதன்வழித் துன்பங்கள் தொடரும், ஆசாரக் குறைவும் உண்டு, அடக்கமே நன்று.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

# சங்கச் செய்திகள்

[யாழ்ப்பாணம்]

அரசாங்க எழுதுவினைஞர் சங்க கணக்காய்வுத்திணைக்களக் கிளை நிர்வாகிகள்:

தலைவர்- திரு வீர வேலாயுதன், துணைத்தலைவர்கள்: சி இராசரெத்தினம், நா பொன்னையா, செயலாளர்: நா சதானந்தன், துணைச் செயலாளர்: பொ சுந்தரலிங்கம், பொருளாளர்: தா செ சிவராசா, செயற்குழு உறுப்பினர்களாக 7 பேர் தெரிவாகினர். [கு]

[வேலணை]

வேலணை செட்டடி சனசமூக நிலைய நிர்வாகிகள்:

தலைவர்: க ஈஸ்வரபாதம் உபதலைவர்: சி சிவகுமார், செயலாளர்: க சுப்பிரமணியம், பொருளாளர்: சோ சிவகுமார் மற்றும் 5 பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது. [கு]

[யாழ்ப்பாணம்]

யா/ ஆனைக்கோட்டை அ. மி த க பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள்:

தலைவர்: க தம்பிராசா [அதிபர்] செயலாளர்கள்: சி பரமகுரு, க. சுப்பிரமணியம், உபதலைவர்கள்: டாக்டர் சி செல்லத்துரை, திருமதி தி. வில்பேர்ட், பொருளாளர்: ந சிவபாதம் [ஆசிரியர்]. [கு]

[வண்ணார்பண்ணை]

வேலணை பல நோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் மண்டைதீவு இரண்டாம் இலக்க கிளையின் நிர்வாகிகள்:

சா தொபியாஸ் (தலைவர்), வ யோகரத்தினம் (உபதலைவர்) செ பரமநாதன் (செயலாளர்), க செல்வநாயகம், க திருநாயகம், த திருபாலசிங்கம், ச சந்தியாப்பிள்ளை, நீ அன்ரனி, வ பத்திநாதர். (ஜ)

[சங்கானை]

சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலயப் பாடசாலை அபிவிருத்திச்சங்க நிர்வாகிகள்.

தலைவர்: கே வைத்தியநாத சர்மா, உபதலைவர்கள்: எஸ். இரத்தினம், எஸ். அமுதலிங்கம், செயலாளர்: கா. பொன்னம்பலம், பொருளாளர்: வை மயில்வாகனம், கணக்குப்பரிசோதகர்: மூ சண்முகம், பதினொரு பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். [கு]

**நாகம்ஸ்** [சுன்னாகம்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
மனிதனும் தெய்வமாகலாம்

**வெஸ்லி**
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எஸ். எஸ். ஆர். - ராஜசுலோசனா
சிவகெங்கைச் சீமை

## உதைபந்தாட்டம்

[சரவணை]

ஊர்காவற்றுறை 'பாலர பிறதர்ஸ்' வர்த்தகஸ்தாபனத்தின் ஆதரவில் நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

போட்டி முடிவில் அண்ணா விளையாட்டுக் கழகத்தை புனித அந்தோனியார் கல்லூரிக்குழு இரு கோல்களால் வென்றது. [வ]

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) தினசரி: 10-30, 2-30, 6-30, & 9-45
கே. பி. சுந்தராம்பாள் நடித்த
ஔவையார்

**ஸ்ரீடேர** (சாவகச்சேரி) போன் 7698 தினசரி 4 காட்சிகள்
கல்யாணபரிசு
(புதிய பிரதி)

**வின்சர்** (யாழ்ப்பாணம்) போன்: 466 தினசரி 3 காட்சிகள்
10-30 2-00 6-00
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

**REGAL** (Jaffna)
NOW SHOWING
Daily at 2-00 4-30, 7-00 p.m. only
SOPHIA LOREN in
Scandle In Sorrento
(Color)
From 9th THE OMEN

**ராஜா** (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - கே.ஆர். விஜயா நடித்த
நெஞ்சிருக்கும்வரை
(புதிய பிரதி)

**RIO** (Jaffna - Town Hall) Phone: 7667
Daily 10-30, 4-45, 7-00, 9-30 P. M.
GRAND RELEASE ON 8-8-79
Ryan O' Neal — Bruce Dern in
DRIVER
23 கோடி டாலர் செலவில் இரண்டு கம்பெனி கூட்டாகத் தயாரித்த அதி சிறந்த படம்
8 Benz கார்கள் நொறுக்கப்படுகின்றன.
13 Stunt வீரர்கள் பங்குபற்றியது
துணிகர வங்கிக் கொள்ளை! பொலிசுக்கு 'டிமிக்கி' கொடுத்துத் திரியும் கூட்டம்
2 மணிநேரம் உங்களை மெய்மறந்திருக்கச் செய்யும் அதிவிறுவிறுப்பான படம்

**மனோகரா** (யாழ். நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
என்று வரும் என எதிர்பார்த்த ரசிகர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தவந்துவிட்டாள்.
எம்.ஜி.ஆர் - பத்மினி - நம்பியார் - தங்கவேலு
சகஸ்நாமம் - ராகினி - எம். ஜி. சக்ரபாணி
நடித்த
ராணி சம்யுக்தா
[புத்தம்புதிய பிரதி]
கடைசித்தடவையாக யாழ்.நகர் வந்திருக்கிறாள் சம்யுக்தா. தவறவிடாதீர்கள் சந்தர்ப்பத்தை.

**ராணி** (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-ஜமுனா
நிச்சய தாம்பூலம்
(புதிய பிரதி)

Sridhar - Jaffna
LAST TWO DAYS
Daily 5 Shows at: 10-30 a.m, 1-30, 4-15, 7-00 & 9-45 p.m
The Day of THE JACKAL (Color)
SUPERB SUSPENSE THRILLER...
"ஜக்கோல்" கலர்
From 10th: THE TEN COMMANDMENTS

## அகில இலங்கைப் போட்டியில் பங்குபற்றுவார்



யாழ்ப்பாணக் கல்லூரிகளுக்கிடையிலான 50 மீட்டர், 75 மீட்டர் ஓட்டப் போட்டியில் குப்பிளான் விக்னேஸ்வரா கல்லூரியைச் சேர்ந்த செல்வி ஸ்ரீ சுமதி ஸ்ரீகாந்தன் முதலாமிடத்தைப் பெற்று அகில இலங்கைப் பாடசாலைகள் விளையாட்டுப்போட்டியில் பங்குபற்றுகிறார். 5ம் வகுப்பில் பயின்றுவரும் செல்வி ஸ்ரீசுமதி தாம் கல்வி பயிலும் பாடசாலையில் நடைபெற்ற இல்லப்போட்டியில் 11வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் 50, 75 மீட்டர் நீளம் பாய்தலில் முதலிடத்தையும், குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்திய 13 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் 50, 75 மீட்டர் நீளம் பாய்தல் போட்டியில் முதலிடத்தையும், மானிப்பாய்த் தொகுதி கல்லூரிகள் விளையாட்டுப் போட்டியில் முதலிடத்தையும் பெற்றுச் சாம்பியன் கேடயங்களைப் பெற்றார்.

இவர் ஏழாலை குப்பிளான் இராமங்களில் முதல் முதலாகச் சாம்பியன் பட்டங்களைப் பெற்று அகில இலங்கை ரீதியில் பங்கு கொள்ளும் முதலாவது மாணவியாவார். இவர் கொக்குவில் இந்துக்கல்லூரியில் கிரிக்கெட், மெய்வல்லுநர், உதைபந்தாட்டம் முதலிய கோஷ்டிகளின் கப்டனாகக் கடமையாற்றியவரும், அகில இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தரும், சமூகத் தொண்டரும், கிளிநொச்சி பிரதான நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் படவரைஞரும் குப்பிளான் சந்தியைச் சேர்ந்தவருமாகிய திரு. எம். எஸ். ஸ்ரீகாந்தனினதும், யாழ். இராமநாதன் கல்லூரியின் பழைய மாணவியும் வீராங்கனையுமாகிய திருமதி. சகுந்தலை ஸ்ரீகாந்தனதும் மூத்த புதல்வியாவார்.

## கைத்தறி ஆடைக் கண்காட்சி

[யாழ்ப்பாணம்]

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் உற்சவத்தை முன்னிட்டு யாழ். புடவைக் கைத்தொழில் இலாகாவினர் நடாத்தும் கைத்தறி ஆடைப் பொருட்காட்சியையும் விற்பனை நிலையத்தையும் இன்று காலை நல்லூர்க் கந்தசுவாமி கோவில் அரசடிச் சந்தியில் உள்ள அரசினர் தொழில்பயிற்சிப் பாடசாலையில் யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளர் திரு யோகேந்திரா துரைசுவாமி ஆரம்பித்துவைப்பார். [கு]

# பௌராணிக வித்தகருக்கு ஒரு பாராட்டு!

சரியான தலைமையும் வழிகாட்டலும் இருந்துவிட்டால் நம் இளைஞர்கள் அற்புதங்களை சாதிப்பார்கள் அனைவரும் வியந்து பாராட்டும் வகையில் காரியங்களை இயற்றுவார்கள்

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தைச்சேர்ந்த இளைஞர்கள் இதற்கு தக்க சான்றாக விளங்குகிறார்கள். சரியான தலைமை கிடைத்திருப்பது ஒருபுறமிருக்க தலைமைக்கு செவிசாய்த்து பணிபுரியும் பண்பும் இவர்களிடமிருப்பது இவர்களின் வெற்றிக்கு காரணம் எனலாம்.

அண்மையில் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய முன்றலில் நடைபெற்ற பௌராணிக வித்தகர் வ. குகசர்மாவின் 'ஞானத்தமிழ்' நூல் வெளியீட்டுவிழாவின் போது இந்த இளைஞர்களின் முன்மாதிரியை காணமுடிந்தது.

திரு. குகசர்மாவின் 60 ஆண்டு பூர்த்தியையொட்டி இந் நூலினை வெளியிட்டு அவரை அன்று தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் கௌரவித்தது.

கோயில் சுற்றுடல் மிகப் புனிதமாகவும் மனதுக்கு இதம் தருவதாகவும் இருக்கின்றது. கோயில் திருப்பணிகள் நடந்துவருவதையும், நடைபெறவிருக்கும் பணிகளுக்கான ஏற்பாடுகளையும் அவதானிக்கும்போது கோயில் அறங்காவல் குழுவினரின் ஆர்வத்தை உணரமுடிகிறது

இந்து இளைஞர்சங்கத்தினரின் அரும்பெரும் பணிகளை விழாவுக்குத் தலைமைவகித்த பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியவர்களே எடுத்துக்கூறி பாராட்டியது குறிப்பிடத்தக்கது. கேட்பதற்கு மகிழ்ச்சியாக மாத்திரமல்ல பெருமையாகவும் இருந்தது

திரு குகசர்மா அவர்களின் தமிழ் சைவப் பணிகளை செல்வி அவர்கள் விளக்கிப் பேசுகையில், 30 ஆண்டுகளுக்கு மேலாக அவர் புராணங்களை வாசித்து பலன் கூறிவருவதுடன் பலருக்கு ஆசிரியராகவும் அவர்கள் இருந்துவருகிறார் என்றும், வீடுவீடாகச் சென்று கற்பிப்பது மாத்திரமன்றி வேண்டியவர்களுக்கு வைத்தியமும் செய்து பணிபுரிந்துவினார் எனவும் பாராட்டினார்.

தமது இப்போதைய நிலைமைக்கு திரு குகசர்மாவும் ஒருவகையில் காரணமாக இருந்தார் என்றும் அவர் கூறினார்.

எழுத்தின்மூலம் சைவத்துக்கும் தமிழுக்கும் பணியாற்றியது மாத்திரமன்றி தமது ஊருக்கும் புகழ் சேர்த்திருக்கிறார் திரு. குகசர்மா என மேலும் குறிப்பிட்டார்.

இப்படியான அந்தணப் பெருமக்களால்தான் நம் சமயத்துக்கும் பெருமை ஏற்படுகின்றது என அவர் கூறியது சாலவும் பொருத்தமானதே.

ஞானத்தமிழ் நூல் வெளிவருவதற்குக் காரணமாய் இருந்த அனைவருக்கும் அவர் பாராட்டும் நன்றியும் தெரிவித்துக்கொண்டார்.

விழாவுக்கு, அறிஞர்கள், கலைஞர்கள், சமயக்குரவர்கள் வர்த்தகப் பெருமக்கள் முதற்கொண்டு சாதாரண மக்கள் வரை பலதரப்பட்டவர்களும் வருகைதந்து சிறப்பித்தது அப்பகுதி மக்கள் குகசர்மா மீது கொண்டிருக்கும் மதிப்பைக் காட்டியது.

நிகழ்ச்சி ஆரம்பமாவதற்கு முன்னர் துர்க்கையம்மன் ஆலயத்தில் விசேஷ பூஜை நடைபெற்று குகசர்மா மங்களவாத்திய சகிதம் விழா நடைபெற்ற இடத்துக்கு அழைத்துவரப்பட்டார்.

தலைமையுரையை அடுத்து பிரம்மஸ்ரீ குமாரசுவாமிக் குருக்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

சிறப்புப் பிரதிகள் பெறும் நிகழ்ச்சியையடுத்து யாழ்ப்பாணம் இலங்கைப் பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி அ. சண்முகதாஸ் நூலை அறிமுகஞ்செய்துவைத்து விரிவுரை நிகழ்த்தினார்

நூலில் இடம்பெற்றுள்ள பல்வேறு கட்டுரைகளையும் எடுத்துவிளக்கிப்பேசிய அவர். நல்ல தமிழில்-எளிய தமிழில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன சாதாரண மக்களும் எளிதில் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றன. சங்ககாலம் தொட்டு தமிழில் எழுந்த இலக்கியங்கள் பலவற்றிலிருந்தும் கருத்துக்களை எடுத்துச் சேர்த்துச் சுவையாகச் சேர்க்கப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

திருமதி மனோன்மணி சண்முகதாஸ் நூலின் சிறப்பு அம்சங்களோடு இன்றைய இளைஞர்களும் இளம் பெண்களும் கைக்கொள்ளவேண்டிய நல்ல பல விஷயங்களைத் தமக்கே உரிய முறையில் சிறப்பாக எடுத்துக்கூறினார்.

குறிப்பாக, குறிப்பிட்ட நாட்களில் துர்க்கையம்மனை வணங்கிப் பூஜிப்பதால் தம் வாழ்வில் விடிவு ஏற்பட்டுவிடுமென்று சில பெண்கள் நினைக்கிறார்கள் என்றும், குறிப்பிட்ட தினங்களில் என்றில்லாமல் தமக்குரிய கடமைகளைச் சரிவரச்செய்துகொண்டு அம்மனையும் பூஜிக்கவேண்டுமென்றும், கடமைகளை உதாசீனம் செய்துவிட்டுத் தேவியைப் பூசிப்பதனால் பயன் ஏற்படப்போவதில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

வாழ்த்துப் பத்திரங்கள் வழங்கலும், பாராட்டுரைகளும் இடம்பெற்றதையடுத்து தெல்லிப்பழை இந்துசமய அபிவிருத்திச் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திரு. குகசர்மாவுக்கு பொற்கிழி வழங்கினார்.

-வர்ணம்

A Grand Release ! Daily 5 Shows
SHANTHI JAFFNA Phone: 7642
— N.B: ALTERED SHOW TIMES —
Daily 10-30, 2-15, 4-45, 7-15, & 9-45
THE DREADED ODESSA
Peter Miller is gone inside. More than a few people hope he doesn't get out..........ever!......
JON VOIGHT... Winner Best Actor Award 1979
with MAXIMILIAN SCHELL & MARY TAMM
"THE ODESSA FILE"
Action - Suspense - Thriller - Scope - Color

## ஆசிரியைகள் வென்றனர்

[புலோலி]

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவிகள் கோஷ்டிக்கும், ஆசிரியைகள் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் ஆசிரியைகள் கோஷ்டி வெற்றிபெற்றது. [கு]

# துன்னாலை தெற்கு அசம்பாவிதங்கள் பலர் கைது

## பதட்ட நிலையைத் தடுக்க பொலிசார் நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]

துன்னாலை தெற்கில் அடிக்கடி தலைதூக்கிவரும் அசம்பாவித சம்பவங்கள் தொடர்பாக ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு நன்னடத்தைப் பிணையில் அனுமதிக்கப்பட்டிருந்தவர்களில் இருபதுபேர் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கொலைகளைத் தொடர்ந்து மீண்டும் கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

வழக்குச் சம்பவங்கள் தொடர்பாக மூண்ட பிரச்சினைகளால் கடந்த வெள்ளிக்கிழமை இரவு வீடொன்று தீவைக்கப்பட்டு, கோடரிகத்தி போன்ற ஆயுதங்களால் ஒருவர் கொலைசெய்யப்பட்டதும்; காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சந்தேகநபர் ஒருவர் பின்னர் மரணமானதும் வாசகர்கள் தெரிந்ததே.

இச்சம்பவங்களைத் தொடர்ந்தே மேற்படி இருபதுபேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களுடன் வேறுசிலரையும் கைதுசெய்து றிமாண்டில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் திரு. கே. ஞானச்சந்திரன் பருத்தித்துறைப் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

பத்து மாதங்களுக்கு முன்னர் துன்னாலை தெற்கில் வேம்படியில் ஒரே சமூகத்தைச் சேர்ந்த இருகோஷ்டியினருக்கிடையே மூண்ட சண்டையைத் தொடர்ந்து கடந்த வெள்ளிக்கிழமை மீண்டும் கலவரம் இடம்பெற்றது இதன் எதிரொலியாக பரமன் தருமன் என்ற ஊமை கொலை செய்யப்பட்டார் இதனைத் தொடர்ந்து சந்தேகநபராக கருதப்பட்ட வல்வி ஆறுமுகம் படுகாயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் இங்கு மரணமானார்.

இவ்விரு கொலைகளையும் தொடர்ந்து அக்கிராமத்தில் இப்பொழுது பதட்டநிலை உருவாகியுள்ளதால் அதே கிராமத்தைச் சேர்ந்த முன்னர் நன்னடத்தைப்பிணையில் விடப்பட்ட இருபதுபேரையும் கைதுசெய்து றிமாண்டில் வைக்குமாறும், பதட்டநிலைக்குக் காரணமான வேறு சிலரையும் கைதுசெய்து றிமாண்டில் வைக்குமாறும் பருத்தித்துறை நீதவான் திரு. கே. ஞானச்சந்திர பருத்தித்துறை பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார். [கோ]

### கொலை என்று தீர்ப்பு

[யாழ்ப்பாணம்]

துன்னாலை தெற்கில் ஒரே சமூகத்தைச் சேர்ந்த இரு பிரிவினருக்கிடையே மூண்ட சண்டையில் படுகாயம் அடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமான வல்வி ஆறுமுகத்தின் [50 வயது] மரணம் தொடர்பான விசாரணை கடந்த இருதினங்களாக யாழ் ஆஸ்பத்திரியில் நடைபெற்றது. மரண விசாரணை அதிகாரியும் பதில் நீதவானுமான திரு. எஸ். கனகரத்தினம் மரண விசாரணையை நடாத்தினார்.

நேற்று நடைபெற்ற மரண விசாரணையில், மரணமான ஆறுமுகத்திற்கு சிகிச்சையளித்த டாக்டர் கணேசரத்தினம் சாட்சியமளித்தார். சாட்சியங்களின்பின் மரண விசாரணை அதிகாரி கொலை என்று தீர்ப்பளித்தது, சந்தேக நபர்களான மகேந்திரன் வனம் ஆகியோரைக் கைதுசெய்து பருத்தித்துறை நீதவான் முன்னிலையில் ஆஜர்செய்யுமாறு பருத்தித்துறைப் பொலிசாருக்குப் பணித்துள்ளார். [கோ]




பருத்தன் - ஸிரிநோசந் பிரிவு றோட்டறிக் கழகத்தின் 1979—80ம் ஆண்டுக்கான தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட வி. ரி சிவலிங்கத்திற்கு இக்கழகத்தின் முன்னாள் தலைவர் திரு. ஏ அம்பலவாணர் பதவிப் பிரமாணம் செய்துவைத் பொழுது எடுக்கப்பட்டபடம். வலதுபுறம் யாழ் றோட்டறிக் கழகத் தலைவர் சட்டத்தரணி திரு. எஸ். கனகரத்தினம் அமர்ந்துள்ளார்.

### ஆளுனர் ஜம்புகேசன்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

டறிக் கழகத்திலும் உரை நிகழ்த்துவார்.

இவர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் காலத்தில் யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தலைவர் திரு. சி. கனகரத்தினத்துடனும்மற்றைய உத்தியோகஸ்தர்களுடனும் இவ்வருடத்தில் றோட்டறிக் கழகம் திட்டமிட்டுள்ள சேவைகள் பற்றி கலந்துரையாடுவார்.

திரு: ஜம்புகேசன் சர்வதேச றோட்டறிக் கழக சமாசத்தில் பிரதிநிதித்துவம்வகிக்கும் 378 றோட்டரி ஆளுனர்களில் ஒருவராவர்.

தென்இந்தியாவில் அமைந்துள்ள திருநெல்வேலிமாவட்ட றோட்டறிக் கழகத்தின் அங்கத்தவரான திரு ஜம்புகேசன் இத்தாலியில் அமைந்துள்ள ரோமாபுரியில் 1979ம் ஆண்டு ஆனிமாதம் நடைபெற்ற றோட்டரி சர்வதேச சமாஜ மகாநாட்டில் ஆளுனராகத்தெரிவு செய்யப்பட்டார். இவர் 1980ம் ஆண்டு ஆனி 30ம் திகதிவரை இப்பதவியை வகிப்பார்.

திரு. ஜம்புகேசன் தென்இந்தியாவில், மதுரை, சேலம், ஈரோடு, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, நாகர்கோவில் தூத்துக்குடி மாவட்டங்களில் கிளைகள் கொண்ட பிரசித்தி பெற்ற மோட்டார் வாகன விற்பனையாளர்களான ஏ ஆர், ஏ எஸ், பி வி, பி வி கம்பனியின் பங்காளர் ஆவர்.

### கோட்டை...

1-ம் பக்கத் தொடர்ச்சி)

வத்தில் போக்குவரத்து அமைச்சர், ஐனுப் எம், எச். முகமது[ இராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ்சும் உரையாற்றுவர்; (ம)

### கலை, கலாச்சார—

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வேலணை செட்டிபுலம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்ற கருத்தரங்கில் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட சனசமூக நிலைய முன்மாதிரி செயல் திட்ட ஒன்றியத்தினால் நடாத்தப்பட்ட இக்கருத்தரங்கிற்கு ஒன்றியத் தலைவர் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார்.

திரு. ஜெகநாதன் தொடர்ந்து பேசுகையில், முதலில் சொந்தக் கிராமத்தை அபிவிருத்தி செய்து முன்னேற்றுவதற்கு இப்பகுதியில் உள்ள இளைஞர்கள் முன்வருவதோடு, கிராமத்தில் உள்ள மூலப்பொருட்களை நன்கு பயன்படுத்தி தொழில் மூலம் பொருளாதாரவளத்தைப் பெருக்கவேண்டும்" என்றார்.

இக்கருத்தரங்கினை இலங்கை தேசிய இளைஞர் மன்ற யாழ். மாவட்ட அதிகாரி திரு அ. நீலகண்டன் மங்களவிளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார்.

அதைத் தொடர்ந்து தலைவர் திரு. கிருஷ்ணமூர்த்தி தமது தலைமையுரையில், "வேலணை கரையோரங்களில் கடல்நீர் உட்புகும் அபாயம் தோன்றியுள்ளது. கடல் நீருக்கு அணை கட்டி இவ் அபாயத்திலிருந்து மக்களைக் காப்பாற்ற இளைஞர்கள் முன்வரவேண்டும்" என்றார்

மாதர்சங்கத் தலைவி திருமதி பத்மாவதி திருஞானச்செல்வம் உட்பட பலர் உரையாற்றினர்கள். (கு)

### அரசாங்கத்தில் ஏன் சேர்ந்தேன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் திரு. செ. இராசதுரை கூறினார்.

இரத்தோட்டைத் தொகுதியிலுள்ள உக்குவலை அஜ்மீர் முஸ்லீம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் திரு. இராசதுரை மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் கூறியதாவது:

"ஒன்றுக்கும் மேற்பட்ட மொழிபேசும் மக்கள் உள்ள நாடுகளில் மொழிப்பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஆனால் அந்நாட்டு மக்கள் தனிநாடு கோரவில்லை;

"இந்தியா, ஈரான் போன்ற நாடுகளில் சிறுபான்மையினரின் பிரச்சினைகள் சுமுகமாக தீர்க்கப்பட்டுள்ளன. அங்கே நாட்டைத் துண்டாடவேண்டுமென எவரும் கோரவில்லை.

"1958ஆம், 1965ஆம், 1970ம் ஆண்டுகளில் ஆட்சி அமைக்க தமிழரசுக்கட்சி தமது பூரண ஆதரவை வழங்கியது அதேபோன்று தமிழர் விடுதலைக் கூட்டணியும் இன்றைய அரசாங்கத்துக்கு பூரண ஆதரவினை வழங்கி சமாதானமாகவும், ஒற்றுமையாகவும் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு வாழவழிசெய்யவேண்டும்"

### விஞ்ஞான கணித--

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யையும், ஜூன் 30ந் திகதி பத்திரிகையில் வெளியான செய்தியினையும் தங்கள் கவனத்திற்கு தாழ்மையுடன்கொண்டு வருகின்றோம்.

"மேலும் இதற்கு முன்னர் இது தொடர்பாக எமது திருவனந்தபுரம் தொடர்பு கொண்டபோது இந்தியமனம் தொடர்பாக எமக்குக் கிடைத்த பதில்களையும் இணைத்துள்ளோம். எனவே க. பொ. த. [உ-த] சித்தியடைந்தவர்கள் ஆசிரிய நியமனத்தில் அமர்த்தும் கல்வி அமைச்சு எம்போன்ற மாணவர்களுக்கு இந்தியமனங்களை வழங்குவதில் முன்னுரிமை தரவேண்டும் என்பதை தங்கள் கவனத்திற்குகொண்டு வருகின்றோம்" [செ]

இலவச3மாத வெல்டிங்(ELECTRIC&GAS)பயிற்சி

யாழ். லயன்ஸ்கழகத்தினல்

யாழ்ப்பாணம் NATIONAL INSTITUTES
பயிற்சி நிலையத்தில்
அளிக்கப்படும்

இதற்கு விண்ணப்பம் செய்வோர் [i] அரிசிப் பங்கீட்டுப் புத்தகமுடையவராகவும் [ii] 15-8-79 ம் திகதி 21 வயதுக்கு உட்பட்டவராகவும் [iii] G C E O/L பரீட்சையில் குறைந்தது ஆங்கிலத்தில் சித்தியும், கணிதம், பௌதிகம் ஆகிய பாடங்களில் சிறப்புச் சித்தியும் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். 15-8-79 க்கு முன், தலைவர், யாழ் லயன்ஸ் கழகம், 2, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். 3258

மரண அறிவித்தல்

கனகசபை குமாரசாமி

வட்டுக்கோட்டை மேற்கு கட்டுவைத்தியர் (பருத்தியடைப்பு) திரு. கனகசபை குமாரசாமி அவர்கள் காலமானார். அன்னார், காலஞ்சென்ற கண்மணியம்மாவின் கணவரும், திரு. கு. திரவியராசாவின் தந்தையாரும், வட்டுக்கோட்டை கட்டுவைத்தியர் திரு க. முருகுப்பிள்ளை, திருமதி நாகரத்தினம் சிவகுரு, காலஞ்சென்ற திருமதி தங்கரத்தினம் நல்லதம்பி ஆகியோரின் சகோதரரும், செல்வன் பரந்தாமனின் பேரனுமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை[9-08-79] காலை பத்து மணிக்கு வட்டுக்கோட்டையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கு. திரவியராசா

சிவன்கோவிலடி,
வட்டுக்கோட்டை 3260

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No: [GB/8948/78 The Eelanadu P B No. 49. Teegeram: Eelanadu. T:Phon: 389.